**தலைப்பு – 320 சிவில் பாதுகாப்பு திணைக்களம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் படி, சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள், அவதானிப்புகள் உள்ளடங்கிய சுருக்கமான அறிக்கை 2019 மே 28 ஆம் திகதி கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் படி கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி, இவ் அறிக்கை பாராளுமன்றத்தில் சமப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது நோக்காகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிட்டபட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்களிப்பு உத்தியோகத்தரினது பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம், திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக கணக்களிப்பு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டியதுடன் அம் முறைமையின் ஆக்கபூர்வத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு இதன் படி, முறைமை ஆக்கபூவமான வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கடற்படையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள சமர்ப்பிக்கப்படுகையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு தெரிவித்துள்ளளேன்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறித்துரைக்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான தேவைப்பாடு இன்மையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கானவற்றுடன் இணங்கி உள்ளன எனக் குறிப்பிட முடியாதுள்ளது.

(ஆ) சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் தேவைப்பாடு இன்மையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ் அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | செலவின விடய இல 1003,1101 மற்றும் 1303 இன் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக் கூற்றில் எந்தவித பொறுப்பும் காண்பிக்கப்பட்டிராத போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது இச் செலவின விடயத்தின் கீழ் முறையே ரூபா 25,574,629 தொகையும் ரூபா 342,792 தொகையும் ரூபா 17,155 தொகையும் 2018 ஆம் ஆண்டின் செலவினத்திற்காக தீர்க்கப்பட்டிருந்தது. | சேலவினம் சரியாக கணக்கீடு செய்யப்படும் தேவைப்பாடு எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. | செலவின விடய இல.1003 தொடர்பாக நி.பி.115(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் விடய இல.1002 இற்காக 2018 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு இன்மையால் நி.பி. 94(2) இன் படி, கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் விடய இல. 1303 இற்காக கட்டு நிதி வழங்கப்பட்டிராமையால் அத்தியாவசியமான செலவினங்களை ஏற்க வேண்டியிருந்தது. |
| (ஆ) | செலவின விடய இல. 2001 இன் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக் கூற்றில் பொறுப்புக் கூற்றில் ரூபா 18,430 தொகையான பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்த | வருடத்தின் செலவினங்களிற்கு உரித்தாக பொறுப்புகள் சரியாக இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொறுப்புக் கூற்று தயாரிக்கப்படுகையில் நேர்ந்த தாமதம் காரணமாக 2001 செலவின விடயத்தின் கீழ் ரூபா 761,640 தொகை உள்ளடக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் 2019 ஆம் ஆண்டின் செலவினப் பதிவேட்டில் அச் செலவின விடயத்தின் கீழ் ரூபா 761,640 தொகையான பொறுப்புகள் தீர்க்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மூன்றாம் தரப்பினருக்கு மீள் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக தற்காலிகமாக வைத்துக்கொள்ளப்பட்ட வைப்புக் கணக்கில் வருடத்திற்கு அதிகமான காலமாக தீர்க்கப்படாதுள்ள கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 38,259,348 ஆகக் காணப்பட்டது. | வைப்புக் கணக்கில் மீதி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் தேவைப்பாடு எடுத்துக்காட்டப்படும். | இவ் வைப்புத் தொகையில் பாதுகாப்புக் கடமைகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த படைவீரர்களிற்காக கிடைக்கப்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தின் படி வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததாகவும் அத் தொகை 02 ஆண்டுகளுக்குள் தீர்க்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் கொண்டச்சிய பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்டிருந்த கஜுப் பயிர்ச்செய்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது உழைக்கப்பட்டிருந்த மொத்த வருமானம் ரூபா 58,448,565 ஆகக் காணப்பட்டது. இக் காலப்பகுதிக்காக படையினரின் சம்பளம் தவிர்ந்த ஏனைய செலவினம் ரூபா 114,104,066 தொகை ஏற்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் வருமானத்திற்கு மேலான செலவினம் ரூபா 55,655,501 ஆகக் காணப்பட்டமையால் செயற்திட்டத்தில் இருந்து போதியளவு நலன் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் மூலம் போதிய நலன் கிடைக்கப்பெறக்கூடிய வகையில் செயற்திட்டத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். | கஜு பயிர்ச்செய்கையின் விளைச்சல் ஆகக் கூடுதலான நிலையை எய்துவதற்கு 08 வருட காலமளவில் கடந்திருந்ததுடன் எதிர்வரும் 03 வருடங்களிற்குள் செலவினத்தை ஏற்க முடிந்திருந்தது. |
| (ஆ) | கஜு பயிர்ச்செய்கைச் செயற்திட்டத்தில் துணைப் | முன்னைய வளிமண்டலவியல், வானிலை தகவல்கள் | பிரதேசத்தில் நிலவிய வறட்சி நலை காரணமாக துணைப் |

| | | |
|---|---|---|
| பயிர்செய்கை தேறிய வருமானம் 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான முறையில் அதிகரித்திருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது தேறிய வருமானம் ரூபா 7,337,555 தொகையால் வீழ்ச்சியுற்றிருந்தது. | பெறப்பட்டு இதற்கு இணையாகும் வகையில் துணைப் பயிர்செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | பயிர்ச் செய்கைகள் பாதிப்புற்று வருமானம் வீழ்ச்சியுற்றிருந்தது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 32001-01-1409 ஆம் இலக்க செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இதன் மூலம் ரூபா 600,000 தொகை மீண்டெழும் செலவின விடயத்தினூடாக மாற்றப்பட்டிருந்த போதிலும், அவ் ஏற்பாட்டுத் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாட்டுத் தொகை குறித்த ஆண்டின் போது பயன்படுத்தும் தேவைப்பாடு எடுத்துக் கூறப்பட்டது. | கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படுகையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு உறுதிச் சீட்டுக்களும் பட்டியல்களும் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

**2.3 ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| செலவின விடய 1506 ஆம் 2101 ஆம் செலவின விடயத்திற்காக மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பணத்தில் முறையே 54 சதவீதமும் 100 சதவீதமுமான ஏற்பாடு எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டு எதிர்வுகூறல் மற்றும் செலவின முகாமைத்துவம் இயலுமானவரையில் சீராக்கும் தேவைப்பாடு எடுத்துக்காட்டப்பட்டது. | அரச ஆதனக் கடன் பெறுவதை எதிர்பார்க்கும் அளவில் நேராமை, மற்றும் கொன்ட்ரோலர் ஜெனரலின் அங்கீகாரம் பெறப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக ஏற்பாடுகள் எஞ்சியிருந்தன. |

**2.4 பொறுப்புகள் மற்றும் பிணைகளிற்கு உட்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ------------------------------ | ------------------------- | ------------------------- |
| நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம், ஏற்கப்பட்ட செலவின மற்றும் பொறுப்புகளின் அளவு உரிய ஆண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை விஞ்சலாகாத போதிலும் மீளாய்வாண்டின் போது 2103 | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) ஆம் பந்தியின் படி, | வருடத்தின் இறுதிக்காலப்பகுதியில் கட்டுநிதிப் பணம் வழங்கப்பட்டிராத காரணத்தால் திணைக்களத்தில் அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை எய்துகொள்வதற்காக |

| | | |
|---|---|---|
| ஆம் செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடு விஞ்சப்பட்டு ரூபா 499,971 தொகையான பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தது. | பிணைக்கு உட்பட வேண்டும். | வெளிநிறுவகங்களுடன் பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டதாகவும் அந் நிறுவகங்களுக்கு பட்டியல்களைத் தீர்த்துக்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் பொறுப்புகளிற்கு உட்பட நேர்ந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது. |

**2.5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ------------------------------- | -------------------------- | -------------------------- |
| ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 04 திணைக்களங்களால் இத் திணைக்களத்தால் எய்தப்படுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட நானாவித செயற்பாடுகளுக்காக ரூபா 136,271,881 தொகையான ஏற்பாடு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 133,349,697 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஏற்பாட்டில் ரூபா 2,922,184 தொகை எஞ்சியிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதி உரிய செயற்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக செயற்படுத்தும் தேவைப்பாடு எடுத்துக் கூறப்பட்டது. | திறைசேரி கட்டுநிதி குறித்தவகையில் கிடைக்கப்பெற்றிராததன் காரணமாக இவ்வாறு சேமிக்கப்பட்டிருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

மோல்பே பிரதேசத்தில் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்படும் சிவில் பாதுகாப்பு திணைக்கள தலைமைக் காரியாலயம் தொடர்பான விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்காக தலைமை அலுவலகக் கட்டிடம் ஒன்றின் நிர்மாணிப்பிற்காக புனிதத் தலத்திற்கு உரித்தான ஒரு ஏக்கர் காணி ஒன்று 30 ஆண்டுகளுக்கு வரி அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன் வரிக் காலம் விஞ்சியதை அடுத்து குறித்த கட்டிடம் உள்ளடங்கலாக ஆதனம் புனித ஸ்தலத்திற்கு உரித்தான வகையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கட்டிடம் நிர்மாணிக்கப்பட முன்னர் காணியின் உரித்து கையேற்கப்படுவது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தற்போது பயன்படுத்தப்பட்ட கட்டிடங்களிற்காக செலவிடப்படும் வாடகைக்கு ஒப்பாக இலாபகரமானதாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இந் நிர்மாணிப்புகள் 2015 செப்தெம்பர் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2017 யூலை 12 ஆம் திகதியே பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2016 நவம்பர் 16 ஆம் திகதி காணி உரித்தான தரப்பினர் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் இடையே எழுத்து மூல உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்தது. மேலும், கட்டிடத்தின் ஆரம்பத் திட்டத்திற்காக 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | முன்னங்கீகாரம் குறித்த வகையில் பெறப்படுவதற்கு செயற்படும் தேவைப்பாடு எடுத்துக்காட்டப்படுகின்றது. | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உரிய அங்கீகாரம் பெறப்படும் நடவடிக்கைகள் நடாத்தப்பட்டு வருகின்றது. |
| (இ) | மொத்த கிரய மதிப்பீடு ரூபா 55,288,834 தொகையான தலைமையகக் கட்டிடம் 3 மாடிகளைக் கொண்டமைந்து நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் முதலாம் மாடியின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதை அடுத்து 04 மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றாக நிர்மாணிப்பு திட்டம் திருத்தப்பட்டிருந்தது. இதன்படி, ரூபா 55,288,834 தொகையான மொத்த கிரயம் மதிப்பீடு ரூபா 180,689,390 வரை அதிகரித்திருந்தது. | சுந்தர்ப்பங்கள் சரியாக மதிப்பிடப்பட்டிராமையால் ஏற்பட்ட கிரயம் உயர்வடைவதைக் கட்டுப்படுத்துதல் | திணைக்கள தலைமையகத்திற்காக கட்டிடம் ஒன்று இன்மையால் நிர்மாணிக்கப்பட்டுவரும் 3 மாடிகளைக் கொண்டமைந்த கட்டிடம் இதற்காக ஏற்றது என தீர்மானிக்கப்பட்டதை அடுத்து 4 மாடிகளைக் கொண்ட நிர்வாகக் கட்டிடத் தொகுதியாக நிர்மாணிக்கப்படுவதற்கு தீமானிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் புலனாய்வு பணிப்பாளர் சபையின் சேவையில் ஈடுபட்டிருந்த புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களின் அணி நிறைவேற்று நிதியின் ரூபா 12,900,000 தொகை இத் தலைமையகக் கட்டிட நிர்மாணிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக அணி நிறைவேற்றுனர் நிதியத்தின் உடன்பாடு பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆணி நிறைவேற்று நிதியத்தின் பணம் அரசாங்க திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் புலனாய்வுப் பிரிவு அங்கத்தவர்களிற்காக பணம் கோரப்பட்டிருப்பின் அக் கொடுப்பனவிற்காக தேவையான ஏற்பாட்டிற்காக தேவையான ஏற்பாடு திறைசேரியில் இருந்து வழங்கப்படுவதற்கான இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஒட்டுமொத்தப் பதவியணி 2018 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 36,399 ஆகக் காணப்பட்டது. புதிய ஆட்சேர்ப்பு இடம்பெற்றிராமையால் தற்போதுள்ள சகலரும் ஓய்வடைந்ததை அடுத்து 2058 | நிறுவகத்தின் எதிர்கால நிலை குறித்து கருத்தில் கொள்ளப்பட்டு செயற்பட வேண்டும். | தற்போது திணைக்களத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் நிறுவகத்திற்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டின் போது திணைக்களம் செயலியந்து போவதற்கான இடமுள்ளது. குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட காணியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் ஆதனங்கள் 30 ஆண்டுகளின் பின்னர் குத்தகையாளருக்கு மீள உரித்தாகும் வகையில் எதிர்வரும் காலத்தில் திணைக்களச் செயற்பாட்டின் தேவைப்பாடு மேலும் ஏற்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பத்தின் போது இத்தகைய கட்டிடங்களின் தேவைப்பாட்டை எய்துவதில் இடர் அவதானிக்கப்பட்டது. | | செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் தேவைப்பாடு ஏற்படின் உடன்படிக்கைகள் திருத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். |

### 3.2 கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களப் படையணியின் தேவைப்பாட்டிற்காக 25 வகையான விவசாய உபகரணங்கள் பல்வேறு வகையில் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 3,675,775 தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 15 வகையான உபகரண வகைகளின் உள்ளபடியான விலைகள் மதிப்பீடு செய்யப்பட்ட விலையைப் பார்க்கிலும் 70 சதவீதத்தில் இருந்து 276 சதவீதம் வரையான வீச்சிலான உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், தேவைப்பாட்டின் படி, இனங்காணப்பட்ட 4 உபகரண வகைகள் கொள்வனவு செய்வதில் இருந்து அகற்றப்படுவதற்கும் 02 வகையான உபகரணங்கள் திட்டமிடப்பட்ட அளவைப்பார்க்கிலும் குறைவாகவும் கொள்வனவு செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உள்ளபடியான தேவைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட்டு கொள்வனவு நடவடிக்கைகள் செயற்திறனாக மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீடு 2016 ஆம் ஆண்டின் போதே தயாரிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது இரும்பு மற்றும் உருக்கு விலைகள் உயர்வடைந்து ஏனைய விவசாய உபகரணங்கள் சந்தை விலைகள் உயர்வடைந்ததன் காரணமாக மதிப்பீட்டுத் தொகைக்கும் உள்ளபடியான விலைகளிற்கும் இடையே முரண்கள் ஏற்பட்டிருந்தன. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.2 இன் படி, ஒவ்வொரு நிதி ஆண்டின் போதும் மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் முன்னைய ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பௌதீக ரீதியாக முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2018 நிதி ஆண்டிற்காக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டிருந்த 35 மெய்மையாய்வு சபைகளில் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் 04 மெய்மையாய்வு அறிக்கைகள் | குறித்த வகையில் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு நிதி மற்றும் ஏனைய அறிக்கைகள் நாளதுவரையாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டாம் கால வரையறைக்குரிய நிறுவகம் ஒன்றானமையால் யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பாதுகாப்பு படையணிக்காக புதிய சீருடைகள் வழங்கப்படுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 757,620 பெறுமதியான மேற்சட்டைத் துணி 3,294 மீற்றர்கள் ரூபா 2,658,960 பெறுமதியான காற்சட்டைத் துணிகள் 7,386 மீற்றர்கள் ரூபா 5,361,230 பெறுமதியான தைத்துப் பூர்த்தியான 2,641 ஆடைத் தொகுதிகள் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் பயன்படுத்தப்பட்டிராதிருந்தமை அவதானிக்கப்பட்டது. புதிய சீருடைகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக ஊக்கமின்மை காரணமாக இவ் ஆடை | தேவைப்பாடு இனங்காணப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட சீருடைகளும் துணிகளும் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய சீருடைகள் அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து அச் சீருடைகள் தொடர்பில் அரச நிறுவகத் தலைவர்கள் சிலர் விருப்பின்மையைத் தெரிவித்ததன் காரணமாக விநியோகிப்பு இடைநிறுத்தப்பட்டிருந்தது. நாட்டின் பாதுகாப்பு நிலை சாதகமானதை அடுத்து இச் சீருடைகள் மீளப் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

இருப்பு குறைவான பயன்பாட்டுடன் நிலவியமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தை எய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவகத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு உரித்தாக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் தமது நோக்கெல்லையின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் குறித்து செயற்பட வேண்டிய முறை குறித்து அறியப்பட்டிருந்தது. எனினும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பாக திணைக்களம் தொடர்பாக ஊக்கம் காண்பிக்கும் தரப்பினரை இனங்கண்டிருந்த போதிலும் அவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கை எய்துவதற்கு உரிய வகையில் செயற்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக இனங்காணப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கை எய்துவதற்காக தேவையான ஏற்பாடு கோரப்பட்டிருந்ததுடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிராமையால் எஞ்சிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) | திணைக்களத்தால் இனங்காணப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி சுட்டிகளிற்காக சகல தரப்பினரும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் தரவுகள் சேகரிக்கப்படும் முறைமை இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனினும், தரவுகள் சேகரிக்கப்படும் செயற்பாடுகளிற்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும், எதிர்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடல் கட்டத்தில் நிலவுவதாகவும் விடயங்கள் கண்டறியப்பட்டன. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை எய்துவதற்காக உரிய வகையில் செயற்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக இனங்காணப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை எய்துவதற்காக ஏற்பாடுகள் கோரப்பட்டிருந்ததுடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாதிருந்ததன் காரணமாக எதிர்வரும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது. |

## 5. மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை.
2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | | | கணக்காய்வு அவதானிப்புகள் | | | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** | **உள்ளபடியான எண்ணிக்கை** | **வெற்றிடம்** | **மிகை** | - | இத் திணைக்களத்திற்காக புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| i. | சிரேஷ்ட | 23 | 15 | 8 | 0 | | |
| ii. | மூன்றாம் நிலை | 84 | 48 | 36 | 0 | | |
| iii. | இரண்டாம் நிலை | 126 | 38 | 88 | 0 | | |
| iv. | ஆரம்ப | 39,960 | 36,546 | 3,414 | 0 | | |
| v. | அமைய/ஒப்பந்த | 0 | 1 | 0 | 1 | | |
| | கூட்டுத் தொகை | 40,193 | 36,648 | 3,546 | 1 | | |

2018 திசெம்பர் 31 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 40,193 தொகையானதுடன் உள்ளபடியான பதவியணி 36,648 ஆகக் காணப்பட்டமையால் வெற்றிடம் 3,546 ஆகக் காணப்பட்டது. அவ் வெற்றிடத்தில் சிரேஷ்ட மட்டத்தின் 8 உம் மூன்றாம் நிலை 36 உம், இரண்டாம் நிலையில் 88 உம் ஆரம்ப நிலையில் 3,414 ஆகவும் காணப்பட்டது.